# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

# இனியும் பொறுப்பதற்கில்லை ...

அன்புமிக்க தோழர்களே,

தமிழகத்தில் BSNL நிறுவனத்தை வளமாக்குவதற்காக கடுமையான முயற்சியினை நிர்வாகத்தோடு இணைந்து நாம் மேற்கொண்டு வருகிறோம். BSNL நிறுவனம் லாபமாக மாறுவது என்பது நமது வாழ்க்கையோடு சம்பந்தபட்டது என்ற உணர்வினை ஊழியர்கள் மத்தியில் ஊட்டி நிறுவனத்தைக் காக்க நாம் தொடர்ந்து போராடிவருகிறோம்.

சமீபகாலமாக தமிழகத்தில் மாநில, மாவட்ட நிர்வாகத்தின் போக்கில் ஒரு அலட்சிய போக்கு தென்பட ஆரம்பித்துள்ளது. பல மாவட்டங்களில் பொது மேலாளர்கள் இல்லை. எனவே நிர்வாகம் நடத்துவதில் அன்றாட நிகழ்வுகளில் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட முதன்மைச் சங்கமான BSNL ஊழியர் சங்கம் ஊழியர் பிரச்சனைகளை விவாதித்திட பொது மேலாளர்களை சந்தித்திட பல நாட்கள் காத்திருக்கவேண்டிய நிலை உள்ளது. பல நாட்கள் கழித்து சந்தித்தாலும் பிரச்சனை தீர்விற்கு பதிலாக தட்டிக்கழிக்கும் போக்கு தென்படுகிறது.

நிர்வாகத்தோடு பிரச்சனையை விவாதிப்பதும், தீரவில்லை எனில் போராடுவதும் தொழிற்சங்கத்தின் அடிப்படை உரிமைகளாகும். இந்த உரிமைகளைக் கூட பல தியாகங்கள் செய்துதான் நாம் பெற்றுள்ளோம். ஆனால் தருமபுரி மாவட்ட நிர்வாகம் இதை புரிந்து கொள்ளாமல் அடக்குமுறையை கையில் எடுத்துள்ளது. உதாரணமாக ஒப்பந்த ஊழியர்களின் சம்பளம் கால தாமதமாவதை கண்டித்து மே 1ம் தேதி விடுப்பெடுத்து உண்ணாவிரதத்தில் கலந்துகொண்ட (மாவட்ட சங்க அறைகூவலை ஏற்று) 32 தோழர்களுக்கு Dies-non கொடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் தலையிட்டாலும் கூட பிரச்சனை தீரவில்லை. "போராடினால் பழிவாங்குவோம்" என நிர்வாகம் முடிவு எடுக்குமானால் அதை முறியடிக்க மீண்டும் போராடுவோம் என்பதை புரியவைக்க நாம் நடத்துகின்ற போராட்டங்களின் மூலம் நிர்வாகத்திற்கு தக்க பதிலடி கொடுப்போம்.

தூத்துக்குடி மாவட்டத்தில் எந்த ஒரு மருத்துவமனையும் அங்கீகரிக்கப்படவில்லை. உடல் நலம் பாதிக்கப்பட்ட தோழர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பில் கொடுத்தால் மாநில நிர்வாகம் நிராகரிக்கிறது. காரணம் என்ன தெரியுமா? அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் சிகிச்சை எடுக்கவில்லை என்பது தான். மாநிலம் முழுவதிலிருந்து வரும் ஊழியர்களின் மருத்துவ பில்களை தீர்வு காணும் பொழுது விதிகளை பார்க்கவேண்டும். மறுக்கவில்லை. ஆனால் மனிதாபிமானமற்று இயந்திர கதியாக நிராகரிப்பதே கொள்கையாக இருப்பதை எப்படி அனுமதிக்க முடியும்?

மாவட்ட அளவில் BSNL வளர்ச்சிக்கு தேவையான உபகரணங்கள் (Cable, Dropwire, Telephone Instruments, Modem) கிடைப்பதில் குறைபாடு, BTS டவர்கள் நிர்மாணிக்கப்பட்ட பின்பும் Energise ஆகாமல் இருப்பது, டவர்களுக்கு தேவையான பேட்டரிகள் வழங்குவதில், பராமரிப்பதில் உள்ள குறைபாடு ஆகியவற்றை நிர்வாகத்தோடு விவாதித்தாலும் எந்த முன்னேற்றமும் இல்லை.

தமிழகத்தில் பிரபலமான பழநி மலை அடிவாரத்தில் BSNL செல் சேவை முற்றிலுமாக கிடைக்காது. இதே நிலைமை தான் ராமேஸ்வரத்திலும். எந்த அவசர நேரத்திலும் BSNL சேவையை பயன்படுத்துவது இயலாத காரியமாகும். பக்தர்கள் பல லட்சம் கூடும் இடத்தில் BSNL சேவை இல்லை

எனில் எப்படி நிறுவனத்தை லாபமாக்க முடியும்? இப்பிரச்சனையை நிர்வாகத்திடம் முறையிட்டும் எந்த பலனும் இல்லை.

BSNL வளர்ச்சியில் ஒப்பந்த ஊழியர்களின் பங்கை யாராலும் மறுக்கமுடியாது. மாதம் முழுவதும் உழைத்த ஒப்பந்த ஊழியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 7ம் தேதியன்று ஊதியம் வழங்கவேண்டும் என்பது BSNL தலைமையகத்தின் உத்தரவாகும். ஆனால் உத்தரவு வெறும் காகிதத்திலேதான் உள்ளது. காலதாமதமாக வழங்குவதே (20 முதல் 25 தேதி வரை, சில சமயங்களில் இரண்டு மாதங்கள் வரை) வாடிக்கையாக இருக்கிறது அதே போன்று BSNL தலைமையக உத்தரவு இருந்தும் EPF/ESI ஆகியவற்றை முறையாக ஒப்பந்த ஊழியர்களுக்கு வழங்குவதில்லை. இந்த அநீதியை தட்டிகேட்பது நமது தலையாய கடமையாகும். மாநில/மாவட்ட நிர்வாகங்கள் BSNL தலைமையக உத்தரவுகளை அமலாக்க மறுப்பதை நாம் ஒரு போதும் அனுமதிக்க முடியாது. ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனையை பேசமாட்டோம் என்ற புதிய நிலையை மாநில மாவட்ட நிர்வாகங்கள் எடுக்கின்றன. தேசிய கவுன்சில், மாநில கவுன்சில் கூட்டங்களில் ஒப்பந்த ஊழியர் பிரச்சனையை நாம் தொடர்ந்து எழுப்பியுள்ளோம். இனியும் எழுப்புவோம். தமிழகத்தில் கடந்த 15 ஆண்டுகளாக சுரண்டப்படும் ஒப்பந்த ஊழியருக்கு ஆதரவாக சுரண்டலை தடுத்திட நாம் போராடி வருவதை நிர்வாகம் மறுக்க முடியாது. இப்பிரச்சனையில் நிர்வாகம் BSNL நிர்வாக தலைமையக உத்தரவுகளை கறாராக அமலாக்க வேண்டும் என கோருகிறோம்.

தோழர்களே, நிர்வாகம் நமது கோபத்தின் நியாயத்தை புரிந்து பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் என இன்னமும் நம்புகிறோம்.

**இல்லையெனில் இனியும் பொறுப்பதற்கில்லை தோழா. பொங்கி எழுந்து போராடுவோம்.**

# இயக்கங்கள்

## 04.07.2014 அன்று மாவட்ட/மாநில தலைநகரங்களில் பெருந்திரள் ஆர்ப்பாட்டம்.

## 11.07.2014 அன்று மாவட்ட/மாநில தலைநகரங்களில் பெருந்திரள் தர்ணா.

# கோரிக்கைகள்:

நிர்வாகமே!

1. மாநில மாவட்ட நிர்வாகங்களே, ஊழியர் பிரச்சனைகள் தீர்வில் அலட்சிய போக்கினைக் கைவிடு..
2. அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தோடு மாவட்ட மேலாளர்கள் வாரமொருமுறை சந்திப்பதை உறுதிப்படுத்து.
3. போராடும் உரிமையைப் பறிக்க நினைக்காதே.
4. தருமபுரி மாவட்டத்தில் 32 தோழர்களுக்கு வழங்கப்பட்ட Dies-non ஐ ரத்து செய்.
5. BSNL வளர்ச்சிக்கு தேவையான உபகரணங்களைத் தடையின்றி வழங்கு.
6. லட்சக்கணக்கான மக்கள் கூடும் பழநி, ராமேஸ்வரம் உள்ளிட்ட இடங்களில் கிடைக்காத BSNL செல் சேவையை சீரமைத்திடு.
7. மருத்துவ பில்களை பரிசீலிக்கும் போது மனிதாபிமானத்தோடு செயல்படு.
8. ஒப்பந்த ஊழியர்கள் பிரச்சனையில் BSNL தலைமையக உத்தரவுகளை முறையாக உடனடியாக அமல்படுத்து.

**போராடுவோம் ..** **வெற்றி பெறுவோம் ..** தோழமையுடன்

**S.செல்லப்பா**
மாநிலச் செயலர்